THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No. Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED: May I know whether the raw film factory to be established in Ootacamund will be entirely run by the Government of India? In view of the importance of the factory, why should not this Government take some shares in it?

THE HON. SRI R. VENKATARAMAN: If the Government of India take up the factory, we can utilise the resources we have for starting some more factories.

Kathayee Ammal Mutt

* 650 Q.—SRI P. S. SANTHANAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா திருவண்ணாமலை டவுனில் உள்ள காத்தாயி அம்மாள் மடத்திற்கு சொந்தமான திருவண்ணாமலை டவுன் திருவூடல் தெருவில் உள்ள கட்டிடங்களை அந்த மடத்தின் டிரஸ்டி ஒருவர் பதினான்கு ஆயிரத்திற்கு ஒரு நபருக்கு விற்ற விஷயம் சர்க்காருக்குத் தெரியுமா?

(ஆ) அப்படியாயின், அதன் பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) The Government have notified their intention to extend the provisions of the Hindu Religious and Charitable Endowments Act, 1959, to this charitable endowment on this and other irregularities committed by the present agent of the Trust.

Gandhigram

* 651 Q.—SRI M. P. SARATHI: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள காந்தி கிராமத்தை ஒரு சர்வகலாசாலையாக உயர்த்த யோசனை உண்டா?

(ஆ) அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. P. SARATHI: காந்திக் கிராமத்திலிருந்து ஏதாவது கோரிக்கை வந்ததா?

THE HON. SRI C. SUBRAMANIAM: என்னிடம் கோரிக்கை எதுவும் காணோம்.

SRI A. V. P. ASAITHAMBI: இந்த காந்திக் கிராமத்திற்கு இது வரை சர்க்கார் என்னென்ன உதவிகள் செய்து வருகிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI K. ANBAZHAGAN: கிராமாந்தரப் பல்கலைக் கழகம் தமிழ் நாட்டில் காந்தி கிராமத்தில் ஏற்படுத்துவது என்று ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறதா, அல்லது வேறு இடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அங்கத்தினர் இரு ஸ்தாபனங்களையும் குழப்பிக் கொள்ளுகிறார்கள் என்று நினைக்கிறேன். ரூரல்யுனிவர்ஸிடி வேறு, ரூரல் இன்ஸ்டிட்யூட் வேறு. ரூரல் இன்ஸ்டிட்யூட் தான் இந்தியாவில்

4, 5 இடங்களில் ஆரம்பிக்கப் போகிறார்கள் தமிழ் நாட்டில். காந்திக் கிராமம், பெரியநாயக்கன் பாளையம் இரண்டு இடங்களிலும் ஆரம்பிக்க இருக்கிறார்கள்.

Sri A. GOVINDASAMY : ரூரல் இன்ஸ்டிட்யூட், பேசிக் எஜுகேஷன் யுனிவர்ஸிடியாக அமைக்க முயற்சிக்கிறார்களா, காந்திக் கிராமத்தில் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : காந்திக் கிராமத்தில் இப்பொழுது ரூரல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட் நடக்கிறது. எஸ்.எஸ்.எல்.ஸி. படிப்புக்குப் பிறகு, விவசாயத்தில், எஞ்ஜினியரிங்கில், சில தொழில்களில் பயிற்சி கொடுத்து, அதற்கு டிப்ளோமா பெறுகிறார்கள். ரூரல் யுனிவர்ஸிடிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அப்படிப் பயிற்சி பெற்றவர்கள் சில தொழில்களுக்குப் போகலாம் என்று சர்க்கார் அனுமதித்திருக்கிறது. சர்வகலாசாலையைப் பற்றி எந்தவிதமான தகவலும் இல்லை.

Trial of Police Officers for corruption

* 652 Q.—**Sri M. P. SARATHI** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் போலீஸ் இலாகாவில் அதிகாரிகள் ஊழியர்கள் எவ்வளவு பேர் தற்காலிக வேலை நீக்கத்தில் (Suspension) இருக்கிறார்கள் ?

(ஆ) அவர்களில் இலஞ்சக் குற்றத்திற்காக விசாரணையிலுள்ளவர்கள் எவ்வளவு பேர் ?

(இ) இந்த விசாரணை அதிக பட்சம் எவ்வளவு நாட்களில் முடிய வேண்டும் என்று விதியுள்ளதா ?

(ஈ) இல்லையென்றால் அவ்வாறு விதி ஏற்படுத்த யோசனை உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The number of persons under suspension as on 31st January 1960 in the Police Department was 134.

(*b*) Twenty-three have been placed under suspension for corruption charges.

(*c*) No, Sir.

(*d*) There is no proposal to fix a time limit for such enquiries as the time required for such enquiries depends on the nature and number of allegations to be enquired into. Every effort is being made to complete the enquiries in as short a time as possible.

Sri K. ANBAZHAGAN : போலீஸ்காரர்கள், ஏற்றுக் கொண்டிருக்கும் பணியின் கடினத்தால் பெரும்பாலும் கடமை செய்யும்போதே தவறுகள் ஏற்பட்டுவிடுவது இயல்பாக இருப்பதினால் இரவு கண் விழிப்பு முதலியவைகளால் இயல்பாகவே தவறுகள் ஏற்பட்டுவிடுவதால் அவர்களைத் தண்டிக்கும் விதிகளைத் தளர்த்த இந்த நிலைமையைக் கருதி, அரசாங்கம் புனராலோசனை செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : போலீஸார் தங்கள் கடமையைச் செய்யும்போது தவறுகள் ஏற்படுகிறது இயல்பாக என்று அங்கத்தினர் கூறியதற்கு மகிழ்ச்சி தெரிவிக்கிறேன். இருந்தாலும், நடவடிக்கை எடுக்கும் விஷயத்தில், சந்தர்ப்பங்களைப் பார்த்துத்தான் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது ; எவ்வளவு கடமை இருந்தாலும், பொறுப்பு இருந்தாலும், கஷ்டம் இருந்தாலும், தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படத்தான் வேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS